AN ISO 9001 : 2015
CERTIFIED INSTITUTION



வெற்றிகரமான
38
ஆம் ஆண்டில்



# AJANTHA
# School of Arts

(GOVT. REGD NO: 1075/89/MS/RD)

## விவரங்கள் - விதிமுறைகள்

# PROSPECTUS

அஜந்தா ஸ்கூல் ஆப் ஆர்ட்ஸ்

No.6, Muthu Nagar
(Near Sundar Thirumana Mandapam)
Poonamallee, Chennai - 600 056
Cell : 99403 90708
86105 96760
website: www.ajanthaschoolofarts.com

Successful 38 Years

இந்த மடலைப் பிரித்து படிக்கத் தொடங்கிய
இந்த நிமிடத்தில் இருந்து உங்கள் எதிர்காலம்
ஒளிமயமாகத் திகழத் தொடங்கிவிட்டது.

அன்புடையீர்... வணக்கம்!

21-ஆம் நூற்றாண்டின் எழுச்சிமிகு காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். வரலாற்றுச் சிறப்பு மிக்க நமது அஜந்தா ஸ்கூல் ஆப் ஆர்ட்ஸ் வெற்றிகரமாக தமது 38-ஆம் ஆண்டு பயணத்தைத் தொடங்குகிறது. இந்த இனிய நேரத்தில் எங்களோடு கைகோர்த்து வாழ்வில் சாதனை படைக்கப் போகும் உங்களை அன்போடு வரவேற்கிறோம்.

இந்தியாவின் தலைசிறந்த கல்வி நிறுவனங்களுள் அஜந்தாவும் ஒன்று என்பது உங்களுக்கே தெரியும். அதுவும் அஞ்சல் வழிக் கல்வியில் சாதனை படைத்து நம்பர் ஒன் ஆக திகழ்வது அஜந்தா என்பதை அறிவீர்கள்.

நமது பள்ளியில் எட்டு விதமான ஓவியப் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன அவை :

1. ஓவிய ஆசிரியர் பயிற்சி
   FREEHAND DRAWING - (HIGHER GRADE)
2. கமர்ஷியல் ஆர்ட் பயிற்சி (D.C.A.)
   DIPLOMA IN COMMERCIAL ART
3. பத்திரிகை ஓவியப் பயிற்சி (D.M.A.)
   DIPLOMA IN MAGAZINE ART
4. ஓவிய நுண்கலைப் பயிற்சி (D.F.A.)
   DIPLOMA IN FINE ART
5. ஸ்கிரீன் பிரிண்டிங் பயிற்சி (D.S.P.)
   DIPLOMA IN SCREEN PRINTING
6. சிறுவர் சித்திரப் பயிற்சி
   CHILDRENS ART COURSE
7. தஞ்சாவூர் ஓவியப் பயிற்சி
   TANJORE PAINTING COURSE
8. வரையற்ற ஓவியப் பயிற்சி –கீழ்நிலை
   FREE HAND DRAWING - LOWER GRADE
9. கார்ட்டூன் ஓவியப் பயிற்சி
   CARTOON ART COURSE

நீங்கள் அரசு வேலை பெற விரும்பினாலும் சரி, அல்லது சொந்தத் தொழில் நடத்தி செல்வந்தராக விரும்பினாலும் சரி, அல்லது கலைவானில் சிறகடிக்கும் ஓவியராகப் புகழ் பெற விரும்பினாலும் சரி, இந்தப் பயிற்சிகள் உங்கள் வாழ்க்கைக்குக் கலங்கரை விளக்கமாக உதவும் என்பது உறுதி.

நீ எதுவாக ஆக நினைக்கிறாயோ
அதுவாகவே ஆகிறாய்.

# 1 ஓவிய ஆசிரியர் பயிற்சி
## FREEHAND DRAWING - (Higher Grade)

அரசு உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில், ஓவிய ஆசிரியராகப் பணியாற்றுவதற்கான ஓவியப் பயிற்சியே இந்தப் பயிற்சியாகும். இந்தப் பயிற்சியின் பெயர் FREEHAND OUTLINE AND MODEL DRAWING - HIGHER GRADE என்பதாகும்.

**இது அரசுத் தேர்வுக்குரியது.**

இந்தத் தேர்வு தமிழ்நாடு அரசு (தொழில் நுட்பத்) தேர்வுத் துறையால் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் நடைபெறுகிறது. கீழ்நிலை, மேல்நிலை (LOWER-HIGHER) என உள்ளது. மேல்நிலை (HIGHER GRADE) தேர்ச்சி பெற்றவர்கள்தான் ஓவிய ஆசிரியராக முடியும்.

> கல்வித் தகுதி :
> இந்தப் பயிற்சிக்கான குறைந்த பட்ச கல்வித் தகுதி S.S.L.C.
> மதிப்பெண் பற்றி கவலை இல்லை.

**அரசுத் தேர்வுகள் :**
அரசுத் தேர்வுகள் பற்றிய அறிவிப்பு தொலைகாட்சியிலும் நாளிதழ்களிலும், அரசுத் தேர்வுத்துறையின் இணைய தளத்திலும் (www.tndge.com) வெளியாகும்.

> அரசுத் தேர்வுக்குச் செலுத்த வேண்டிய தொகை (கட்டணங்கள்)
> Freehand Out line and Model Drawing - Higher Grade Rs. 47/-

**சிறப்பு நேர்முக வகுப்புகள் :**
நாங்கள் நேர்முக வகுப்புகளும் நடத்துகிறோம். அஞ்சலில் பயில்வோரும் விரும்பினால் நேர்முக வகுப்பில் கலந்து கொள்ளலாம். இதற்கென சிறப்பு வகுப்புகள் தேர்வுக்கு முன்னர் ஏழு நாட்கள் நடக்கும். இதற்குத் தனிக் கட்டணம் ரூ. 500/–. இவ்வகுப்புகள் பயனுள்ளவை. தேர்வு பற்றிய நுணுக்கமான அறிவைப் பெறலாம். கடந்த ஆண்டுகளில் சிறப்பு நேர்முக வகுப்பில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் (நூறு சதவீதம்) வெற்றி பெற்றுள்ளனர் என்பதைப் பெருமையுடன் தெரிவிக்கிறோம்.

**நேர்முகப் பயிற்சி :**
நேர்முகப் பயிற்சி பெற விரும்புவோர் அலுவலகத்திற்கு நேரில் வந்தோ அல்லது தொலைபேசி மூலமாகவோ இது குறித்த விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். நேர்முக பயிற்சிக்கும் அதே கட்டணம் தான்.

தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலருடைய வரலாறே,
உலக சரித்திரமாகும்.

DISCLAIMER

* ONLY TRAINING WILL BE GIVEN FOR THIS COURSE
* WE WILL NOT TAKE ANY RESPONSIBILITY REGARDING GOVERNMENT EXAM

**பொறுப்புத் துறப்பு :**

இந்தப் பாடத்திற்கான பயிற்சியளிப்பது மட்டும் அஜந்தாவின் வேலையாகும். அரசுத்தேர்வு குறித்த எந்த நடைமுறைகளுக்கும் அஜந்தா பொறுப்பேற்காது.

# 2 கமர்ஷியல் ஆர்ட் பயிற்சி
## DIPLOMA IN COMMERCIAL ART (D.C.A.)




சிலருக்கு இயற்கையிலேயே அற்புதமாக வரையும் திறமை இருக்கும். ஆனால் போதிய கல்வித் தகுதி இருக்காது. அவர்களது திறமையும் வீணாகி விடக்கூடாது என்பதற்காக கமர்ஷியல் ஆர்ட் பயிற்சியும் அளிக்கிறோம். இப்பயிற்சியில் சேர படிப்பு எதுவும்தேவையில்லை. தமிழ் எழுத, படிக்க தெரிந்தால் போதும்.

ஓவிய கலையின் இந்தப் பிரிவு ஒரு அமுதசுரபியாகும். தினமும் பணம் புரளும் சொந்தத் தொழில் நடத்தலாம்.

விளம்பர போர்டுகள் எழுதுவது, சினிமா சிலைடுகள்தயாரித்தல், பேனர்கள், சுவர் விளம்பரங்கள் எழுதுதல், ஸ்டென்சில் விளம்பரங்கள், புத்தக அட்டைப் படம் வரைதல், சார்ட்டுகள், வாழ்த்து மடல்கள் வரைதல், ஆயில் பெயிண்டிங், போஸ்டர் கலர் வேலைகள், புகைப்படத்திற்கு வண்ணம் தீட்டுதல், கமர்ஷியல் டிசைன்கள்.

இன்றைய நவீன தொழில் நுட்ப வரவான கம்ப்யூட்டர் பயன்பாடுகள் ஆகியவற்றைப் பற்றி விளக்கமாக பாடங்களோடு பலவிதமான எழுத்துக்கள் எழுதும் முறை மற்றும் திரைப்பட நட்சத்திரங்கள், அரசியல் தலைவர்கள் ஆகியோரை வரைதல், வண்ணக் கலவை (கலர் மிக்ஸிங்) , தொழில் நடத்தும் முறை, ஆர்டர்கள் சேகரிப்பது போன்ற பல பாடங்கள் ஏராளமான படங்களோடும், வண்ணப் படங்களோடும் அனுப்பப்படும். கடந்த ஆண்டுகளில் இப்பிரிவில் பயிற்சி பெற்றவர்கள் தனியாக தொழில் தொடங்கி இன்று சிறந்த ஓவியர்களாகி பணமும் புகழும் சம்பாதிக்கின்றனர். தமிழகம் மட்டுமின்றி, ஆந்திரம், கேரளம், கர்நாடகம், மைசூர், பெங்களூர், மும்பாய், டெல்லி, அந்தமான், சிங்கப்பூர், மலேசியா, புருனே மற்றும் வளைகுடா நாடுகள் போன்ற இடங்களிலும் நமது மாணவர்கள் தரமான கமர்ஷியல் ஆர்டிஸ்டுகளாக சக்கைப்போடு போடுகின்றனர் என்பதைப் பெருமையோடு தெரிவிக்கிறோம்.






### எழுத்துக்கள் எழுதும் முறை

எங்கள் பாடங்களில் உள்ள எழுத்து முறைகளை மட்டுமே பயன்படுத்தி, ஆரம்பத்தில்உங்கள் தொழிலை வெற்றிகரமாகச் செய்ய முடியும். அந்த அளவுக்கு அதிகமான எழுத்து முறைகள் பாடங்களில் உள்ளன. இப்படியே எங்கள் கமர்ஷியல் ஆர்ட் பாடங்களின் சிறப்புக்களைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

இந்தப் பயிற்சியின் முடிவில் தகுதி வாய்ந்தோருக்கு **DIPLOMA IN COMMERCIAL ART** என்ற அழகியச் சான்றிதழ் வழங்கப்படும். தனிக் கட்டணம் ரூ. 300/– ஆகும்.

நாம் எதைக்குறித்துச் சிந்திக்கிறோமோ,
அதையே அடைவோம், அடைகிறோம்...

# 3 பத்திரிகை ஓவியப் பயிற்சி
## DIPLOMA IN MAGAZINE ART (D.M.A.)

இன்று பத்திரிகை துறை MASS MEDIA என்னும் வெகுஜன சாதனமாக திகழ்கிறது. பத்திரிகைகளின் எண்ணிக்கை பெருகி வருகிறது. இதற்கேற்ப பத்திரிகை ஓவியர்கள், லே - அவுட் ஆர்ட்டிஸ்ட்டுகள், கார்டூனிஸ்ட்டுகள் அதிகமாகி இருக்கின்றார்களா? என்றால்... இல்லை! ஏதேனும் ஒரு பத்திரிகை அலுவலகத்திற்குச் சென்று இது பற்றி விசாரித்துப் பாருங்கள். பத்திரிகை ஓவியர்களின் தேவையைத் தெளிவாகத் தெரிந்து கொள்வீர்கள். இன்று தமிழில் முன்னூற்றுக்கும் மேற்பட்ட தினசரி, வார, மாத, மாதமிருமுறை இதழ்கள் வெளிவருகின்றன. பத்திரிகை உலகில் ஓவியர்களின் தேவை மிக அதிகம். கடினமாக உழைக்க முடிந்தவர்கள் ஏராளமாக பணம் சம்பாதிக்கலாம். புகழ் உண்டாகும்.



**பத்திரிகை ஓவியப் பயிற்சியின் பாடத்திட்டம் :**

நமது பத்திரிகை ஓவியப் பயிற்சி DIPLOMA IN MAGAZINE ART-ன் பாடத் திட்டங்கள் மிகக் கவனமாக தயாரிக்கப்பட்டவை. நமது ஆசிரியரே பல்லாண்டு காலம் பத்திரிகையாளராகப் பணியாற்றி, சொந்தமாக பத்திரிகையும் நடத்திய அனுபவம் உடையவர். நமது பயிற்சியின் பாடத் திட்டங்கள் பல்வேறு பத்திரிகைகளின் ஆசிரியர்கள், பலதரப்பட்ட பத்திரிகை ஓவியர்கள் ஆகியோரின் ஆலோசனையின் பேரில் உருவாக்கப்பட்டது.

இந்தப் பயிற்சியில் ஓவியம் வரையும் முறைகளை அடிப்படையிலிருந்து விளக்கி தன்னிச்சையாக மனித உருவங்கள் வரைதல் - விலங்குகள், பறவைகள் வரைதல், வாஷ்டிராயிங், லைன்டிராயிங், DRY-பிரஷ் டிராயிங், கொலாஜ் டிராயிங் போன்றவைகளும், கதைப்படங்கள், பத்திரிகை ஓவியத்தில் புதிய உத்திகள், காமிக்ஸ் என்னும் படக்கதைகள், பலவித எழுத்துக்கள், பத்திரிகை லே-அவுட், புத்தக மேலட்டைகள், கிரேயான் சித்திரங்கள், வண்ணப்படங்கள் இவை பற்றிய ஏராளமான பாடங்களும் பிறர் உதவியோடு கம்ப்யூட்டரில் படங்களைப் பயன்படுத்துதல், பத்திரிகைகளை அணுகும் முறை, வாய்ப்பு இவைகளும் விளக்கப்பட்டுள்ளன.

இப் பயிற்சியின் முடிவில் தகுதி வாய்ந்தோருக்கு DIPLOMA IN MAGAZINE ART என்ற அழகியச் சான்றிதழ் வழங்கப்படும். தனி கட்டணம் ரூ.300/- ஆகும்.

அதிர்ஷ்டத்தை நம்பியிருக்க வேண்டாம்,
ஒழுக்கத்தையும், உழைப்பையும் நம்புங்கள்...

# 4 ஓவிய நுண்கலைப் பயிற்சி
## DIPLOMA IN FINE ARTS (D.F.A.)

இதுவரை சொன்ன மூன்று பயிற்சியும், மூன்று விதமானவை. முதல் பயிற்சியாகிய ஓவிய ஆசிரியர் பயிற்சி குறிப்பிட்ட கல்வித் தகுதி உடையோர் மட்டும் அரசு வேலைக்குச் செல்வதற் காக அரசாங்க ஓவியத் தேர்வு எழுதும் பயிற்சியாகும். இரண்டாவது பயிற்சியாகிய கமர்ஷியல் ஆர்ட் பயிற்சி, படிப்பே இல்லாதவர்களும், பயன் பெறக்கூடிய வகையில் சொந்தமாக, ஓவியத் தொழில் நடத்துவதற்கு வழிகாட்டும் ஒரு சிறந்த பயிற்சியாகும். மூன்றா வது பயிற்சியாகிய பத்திரிகை ஓவியப் பயிற்சி ஒரு குறிப்பிட்ட துறையில் தங்கள் திறமையை வெளிப்படுத்தி பணமும், புகழும் பெறச் செய்யும் ஒரு உன்னதமான பயிற்சியாகும். இந்த ஓவிய நுண்கலைப் பயிற்சி எல்லோருக்கும் ஏற்ற இனிய பயிற்சி. இப்பிரிவில் வரையும் ஆர்வமுள்ள யார் வேண்டுமானாலும் சேரலாம். காலத்தைப் பொன்னாக்கும், மனதிற்கு மகிழ்ச்சியளிக்கும் கலைத்தவமே இப்பயிற்சி. இதில் பள்ளி, கல்லூரி மாணவர்கள், குடும்பத் த லைவிகள், டாக்டர்கள், என்ஜினியர்கள், வழக்கறிஞர்கள் என்று எல்லோரும் சேர்ந்து பயிலலாம். பயில்கின்றனர்.





**இந்தப் பயிற்சி ஓவியக் கலையின் அடிப்ப டையிலிருந்து தொடங்கி ஓவியம் வரையும் முறைகளை கற்றுத் தருகிறது.**

வாட்டர் கலர், ஆயில் கலர், அக்ரிலிக் கலர், பேப்ரிக் கலர், டெம்பரா கலர், பேஸ்டல்கள், கிரேயான்கள் ஆகிய வண்ணங்களில் வரையும் முறைகளும், இயற்கை காட்சிகள், உருவப்படங்கள், மனி தர்கள், விலங்குகள், பறவைகள், பலவிதமான பொருட்கள் இவைகளை வரைதல் STILL LIFE, TRADITIONAL, MODERN ART, PORTRAIT PAINTING போன்ற நுண்கலைகளும் விரிவான பாடங்களோடு உள்ளன.

இப் பயிற்சியின் முடிவில் தகுதி வாய்ந்தோருக்கு DIPLOMA IN FINE ARTS என்ற அழகியச் சான்றிதழ் வழங்கப்படும். தனி கட்டணம் ரு.300/- ஆகும்.

உழைப்புக்குத்தான் உயர்வு ;
ஊதியத்திற்கன்று...

# 5 ஸ்கிரீன் பிரிண்டிங் பயிற்சி
## DIPLOMA IN SCREEN PRINTING (D.S.P.)




ஸ்கிரீன் பிரிண்டிங் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். ஓவியத் துறையின் சகோதரக் கலையாகத் திகழும் இந்தத் திரை அச்சுக்கலை (SILK SCREEN PRINTING) உங்கள் வாழ்வில் ஒளியேற்றும் என்பது நிச்சயம். பெரிய எந்திர சாதனங்கள் எதுவும் இல்லாமல் மிகக் குறைந்த செலவில் அச்சிடும் முறைதான் இந்தக் கலையாகும்.

இந்தக் கலையைக் கற்றால், குறைந்த முதலீட்டில் (ரூ.3500/- போதும்) சொந்தத் தொழில் தொடங்கலாம். மாத வருவாய் ரூ.30,000 க்கும் மேல் சம்பாதிக்கலாம்.



இந்தப் பயிற்சியில் ஸ்கிரீன் பிரிண்டிங் -கின் அடிப்படைகளை விளக்கி, விளம்பரத் துணிப்பைகள் அச்சிடுதல், பனியன்களில் அச்சிடுதல், பேட்ஜ்கள் தயாரித்தல், டின்ஷீட் என்னும் தகடு விளம்பரங்கள் செய்தல், விசிட்டிங் கார்டுகள், லெட்டர் பேடுகள் அச்சிடுதல், ஸ்டிக்கர்ஸ் தயாரித்தல், திருமண பத்திரிகைகள், வாழ்த்து அட்டைகள் தயாரித்தல், புத்தகங்களின் மேலட்டை அச்சிடுதல், போஸ்டர்கள் அச்சிடுதல், கொடிகள் அச்சிடுதல், பேனர்கள் அச்சிடுதல் போன்ற ஏராளமான தனித்தனிப் பாடங்கள் உள்ளன. அதிகமான படங்களோடு விளக்கம் தரப்பட்டுள்ளது.

தொழில் தொடங்குதல், ஆர்டர்கள் பெறுதல், விலை நிர்ணயம் செய்தல், வேலையை முடிப்பதற்கான பட்ஜெட் போடுதல், வாடிக்கையாளர் சந்திப்பு போன்ற வியாபார உத்திகளும் விளக்கப்பட்டு... நீங்கள் சொந்தத் தொழில் தொடங்க வழிகாட்டப்படும். முதலீடு அதிகம் தேவையில்லை.

பயிற்சியின் முடிவில்
DIPLOMA IN SCREEN PRINTING
என்ற அழகிய சான்றிதழ் வழங்கப்படும்.
தனி கட்டணம் ரு.300/- ஆகும்.




கடுமையான உழைப்பைத் தவிர
வெற்றிக்கு வேறு வழியில்லை...

# 6 சிறுவர் சித்திரப் பயிற்சி
(அஞ்சல் வழி)
CHILDREN ART COURSE

அஜந்தாவின் முப்பத்து எட்டு ஆண்டு கால கலைப்பயணத்தில், சிறுவர் சித்திரப் பயிற்சி மற்றுமோர் மைல்கல் ஆகும். பலரது வேண்டுகோளுக்கு இணங்க நமது ஆசிரியர் குழுவினரின் சிறப்பான முயற்சிக்குப் பின் இந்தப் பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது. உங்கள் குழந்தைகள். பக்கத்து வீட்டுப் பிள்ளைகள் ஆகியோருக்கு இப்பயிற்சி பற்றிச் சொல்லுங்கள். குழந்தைகள் சித்திரம் கற்பது அவர்கள் எதிர்காலத்திற்குச் சிறந்தது.

**இந்த அஞ்சல் வழிப் பயிற்சி சிறுவர்களுக்கு மட்டுமல்ல, பெரியோர்களும் சேர்ந்து பயில ஏற்றது. ஓவியக்கலையின் அடிப்படை, மிகச் சிறந்த படங்களோடு சொல்லித் தரப்படுகிறது.**

மனமகிழ்ச்சி தரும் அற்புதமான பொக்கிஷமாக பாடங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

தமிழ் ஆங்கிலம் இரண்டு மொழிகளிலும் பாடங்கள் உள்ளன.

கான்வென்ட் பிள்ளைகளுக்கு இது ஒரு கற்கண்டு பயிற்சியாகும். சிறுவர் சித்திரப் பயிற்சியில் சேருங்கள்... சிந்தனை, செயல் இரண்டிலும் சிறப்புடன் திகழ்வீர்கள்.

**பயிற்சியின் முடிவில்**
**அழகிய சான்றிதழ்**
**(Certificate) வழங்கப்படும்.**
தனி கட்டணம்
ரு.300/- ஆகும்.





நம்பிக்கை இருக்கும் இடத்தில் தான்
முயற்சியும் இருக்கும்.

# 7 தஞ்சை ஓவியம் பயிற்சி (Tanjore Painting Course)
## DIPLOMA IN TANJORE PAINTINGS (D.T.P.)
(நேர்முகப் பயிற்சி)

தமிழகத்தின் தொன்மையான கலையாகிய, தென்னகத்தின் நெற்களஞ்சியமாம், காவிரிக் கரையில் நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சை தரணியின் புராதனக் கலைகளின் மணிமகுடமாகத் திகழும் – தஞ்சாவூர் பாணி ஓவியங்களை வரையுங்கள். மனிதர்களைப் படைக்கும் பிரம்மாவாக அல்ல – தெய்வங்களையே உருவாக்கும் பிரம்மாக்களாகத் திகழுங்கள்.



தெய்வாம்சம் பொருந்திய தஞ்சாவூர் ஓவியங்களை வரையக் கற்று அளவில்லாத மனமகிழ்ச்சி அடையுங்கள். சிறிய, பெரிய சித்திரங்களைப் படைத்து உங்கள் இல்லத்தை அலங்கரியுங்கள். உங்கள் உறவினர்களுக்கும், நண்பர் களுக்கும் பரிசாக வழங்குங்கள்.

ஒரு சிறிய தஞ்சாவூர் ஓவியம் ஆயிரம் ரூபாயில் இருந்து, ஒரு பெரிய ஓவியம் இருபதாயிரம் ரூபாய் வரை விலைபோகும் என்கிற விஷயம் உங்களுக்கு தெரியுமா?

### நேர்முகப் பயிற்சி மட்டுமே

TANJORE PAINTINGS என்னும் தஞ்சாவூர் பாணி ஓவியங்கள் வரைவதற்கு அஞ்சல் வழிப் பயிற்சி இல்லை. நேர்முகப் பயற்சி மட்டும் வைத்திருக்கிறோம். காலங்காலமாக குரு – சிஷ்யர் முறையில் வம்சாவளியாகக் கற்றுக் கொள்ளப்படும் இக்கலையை, கலையை வளர்க்கும் நோக்கத்தோடு, கலையை பரவலாக்கும் எண்ணத் தோடும், கலை உள்ளம் படைத்த, கலாரசனை மிக்க உங்களுக்குக் கற்றுத் தருவதற்கு அஜந்தா ஸ்கூல் ஆப் ஆர்ட்ஸ் முன்வந்துள்ளது.

மூடி மறைக்கப்பட்ட இத் தொழிலின் ரகசியங்களை, ஒளிவு மறைவு இன்றி கற்றுத்தர இருக்கின்றோம்.



ஓவியப் பலகைத் தயார் செய்வதில் தொடங்கி, சித்திரங்கள் ஸ்கெட்ச் செய்வது, மரபு சார்ந்த செந்தூரம், ஜாதிலிங்கம், மஞ்சள், காவி போன்ற டெம்பரா வண்ணங்களைக் குழைப்பது, சித்திரம் உருவாக்குவது, தங்க ரேக்குகள் அமைப்பது, இயற்கையான நவரத்தினக் கற்கள் பதிப்பது, செட்டி நாட்டு முறையில் பிரேம் போடுவது, படங்களை மார்க்கெட்டிங் செய்வது போன்ற அனைத்தும் படிப் படியாகக் கற்பிக்கப்படும்.

**பயிற்சிக்காலம்**

ஒருவாரம் – ஏழு நாட்கள் – காலை முதல் மாலை வரை – முழு நாள் தவம் – மாணவர்களின் கற்றுக் கொள்ளும் திறமையைப் பொறுத்து ஓரிரு நாட்கள் கூடுதலாக ஆகலாம்.

வேறு சிந்தனையின்றி முழு கவனத்தோடு, இந்த தெய்வீகக் கலைக்கு உங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். பயிற்சிக் காலத்தில் மாணவர்கள் சென்னையில்தங்கவேண்டும். உணவு, தங்குமிடம் அவரவர் சொந்தப் பொறுப்பாகும். அவரவர் வசதிக்கேற்ப தனியாகவோ, உறவினர் இல்லங்களிலோ தங்கிக் கொள்ளலாம். எனினும் மாணவர்களின் நலன் கருதி அஜந்தாவிலும் தங்குமிடம் ஏற்பாடு செய்யப்படும். இதற்கான கட்டணம் ரூ.300/- ஆகும். ஆண்களுக்கும், பெண்களுக்கும், தனித்தனி வகுப்புகள். வேறுவேறு தேதிகளில் நடைபெறும்.

## பயிற்சியில் சேருவதற்கான தகுதிகள் :

கல்வித் தகுதி எதுவும் தேவையில்லை.
– தமிழ் எழுதப்படிக்கத் தெரிந்து இருந்தால் போதும்.

ஓரளவு வரையத் தெரிந்திருக்க வேண்டும். குறைந்த பட்சம் ஆர்வமாவது அவசியம் தேவை.ஏற்கனவே அஜந்தாவில் ஏதேனும் ஒரு பயிற்சியைப் பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.அல்லது பள்ளி கல்லூரிகளில் ஓவியப்போட்டிகளில் கலந்துகொண்ட சான்றிதழ்கள் இருந்தால் நல்லது.

## பயிற்சிக் கட்டணம்

இதற்கான பயிற்சிக் கட்டணம் ரூ. 5,000/-

பொருட்கள் வாங்க செலவு ரூ. 1,000/-

ஆக மொத்தம் ரூ. 6,000/-



## பயிற்சியில் சேருவது எப்படி?

விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து முழு பயிற்சிக் கட்டணத்தையும் செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளுங்கள். தங்களுக்கு அறிவிக்கப்படும் தேதியில் வகுப்பில் கலந்துகொள்ளுங்கள்.

***பயிற்சியில் சேருங்கள்... பயன் பெறுங்கள் !***

வணங்கத் தொடங்கும்போதே
வளரத் தொடங்கிவிட்டோம்...

# 8 வரையற்ற ஓவியமும் மாதிரி ஓவியமும்–கீழ்நிலை
## FREE HAND DRAWING - LOWER GRADE
## அரசுத் தேர்வுக்குரியது



இந்தப் பயிற்சி ஆரம்பநிலையில் உள்ள அனைவருக்கும் ஏற்றது.

அடிப்படையில் இருந்து முறையாக ஓவியம் கற்றுக் கொள்ளலாம். ஓவியத்துறையின் அடுத்த நிலைக்குச் செல்வதற்கு இந்தப்பயிற்சி ஒரு சிறந்த அடித்தளமாக விளங்கும்.
இது அரசுத் தொழில் நுட்பத் தேர்வுக்கு உரியது.
அரசுச் சான்றிதழ் பெறலாம்.

பள்ளி மாணவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் படிக்கலாம்.

குறைந்த பட்சக் கல்வித்தகுதி எட்டாம் வகுப்பு தேர்ச்சி போதும்.

அடுத்தடுத்து,

Freehand - Higher Grade
Design - Lower Grade & Higher Grade
(I. Interior Decoration, II. Textile & Pattern Design,
III. Silver & Goldsmith Designs, IV. Wood carving)
Painting - Lower Grade & Higher Grade
(Water colour, Oil colour)
Geometrical Drawing - Lower Grade & Higher Grade
Modelling - Lower Grade & Higher Grade

ஆகியப்பாடங்களைப் படித்து அரசுத் தொழில் நுட்பத் தேர்வு எழுதி, ஓவியத்துறையில் ஏராளமானச் சான்றிதழ்கள், வேலை வாய்ப்புகள் பெற முடியும். இந்தப்பிரிவு அதற்குரிய அழகான தோரணவாயில்.

இப்போது பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மாணவர்களும் இந்தப்பயிற்சியில் சேரலாம். தபால் மூலமும் படிக்கலாம். நேர்முகப்பயிற்சியும் உண்டு. பயிற்சிக் கட்டணம் மிகவும் குறைவு. மொத்தப்பயிற்சிக்கட்டணம் ரூ.2500/- மட்டுமே. தவணைமுறையில் 2000+1500 என இரண்டு மாதத் தவணைகளில் செலுத்தலாம்.

***வரையுங்கள் ... வாழ்வில் உயருங்கள் !***

உன் எதிர்காலத்தை நீயேதான் உருவாக்கி கொள்ள வேண்டும்.
மற்றவர்களால் வழிகாட்டத்தான் முடியும்...

# 9 CARTOON ART COURSE
## கார்ட்டூன் ஆர்ட் கோர்ஸ்



அஜந்தாவின்
கார்ட்டூன்
ART COURSE
CAC



# Cartoon Art Course



### கார்ட்டூன் வரைதல் என்பது ஒரு சுகானுபவம்

கண நேரத்தில் ஒரு ஓவியம் தோன்றுவது விந்தையிலும் விந்தை.

இதற்கான பயிற்சியே ஒரு மகிழ்ச்சியான தேடல்

.கார்ட்டூன் வரையும்போது, ஒவ்வொரு நாளும் ஒரு புதிய உத்தியைக் கற்றுக் கொள்வீர்கள்.

### கார்ட்டூன் ஆர்ட் பயிற்சிக்கான பாடத்திட்டம்

இது ஆரம்ப ஓவியர்களுக்கு ஏற்ற வகையில் அமைக்கப்பட்டுள்ளது. வரையும் திறமை இருந்தால் நல்லது. இல்லையென்றாலும் உங்களது வரையும் ஆற்றலை மேம்படுத்த, இந்தக் கார்ட்டூன் ஆர்ட் பயிற்சி பெரிதும் உதவும். இது விளையாட்டு போல் ஓவியம் கற்றுக் கொள்ளும் வித்தியாசமான பயிற்சி.

இந்த பயிற்சியில் எளிமையான நம்பர் கார்டூன் தொடங்கி பலவித கேரக்டர்கள், அனிமல் கார்டூன் வரை அதிகமான பாடங்கள் உள்ளன. அழகான வண்ணப்படங்கள் ஏராளமாக இருக்கின்றன.

கார்ட்டூன் வரையுங்கள்

மனம் மகிழ்ச்சி அடையுங்கள்







**Duration : 6 months**
**(Through correspondence)**
**Fees : 2500/-**
(தவணை முறையில் 1600+1600 செலுத்தலாம்)
**Gpay : 9841530078**



இப்பயிற்சியின் முடிவில் தகுதி வாய்ந்தோருக்கு CARTOON ART COURSE என்ற அழகியச் சான்றிதழ் வழங்கப்படும். தனி கட்டணம் ரூ.300/- ஆகும்.

விடாமுயற்சி பெரிய வெற்றியைத் தரும்.
தொடர் பயிற்சி தரும் பெரும் மகிழ்ச்சி

# பயிற்சியில் சேருவது எப்படி?

விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து, பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் ஒட்டி, மார்க்லிஸ்ட், TC, ஆதார்கார்டு ஆகியவற்றின் ஜெராக்ஸ் பிரதிகள் இணைத்து விண்ணப்பத்தைக் கூரியர் அல்லது பதிவுத்தபாலில்

பிரின்சிபால், அஜந்தா ஸ்கூல் ஆப் ஆர்ட்ஸ், எண் : 6, முத்து நகர், பூந்தமல்லி, சென்னை - 600 056.

- என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

பயிற்சிக் கட்டணத்தை மணியார்டர், டிமாண்ட் டிராப்ட், Gpay மூலம் செலுத்தலாம். வங்கிக் கணக்கிலும் செலுத்தலாம்.

Gpay - 98415 30078 (S.M.SELVAMBIGAI. Praha samayal)

* ஒரு முறை செலுத்திய தொகை எக்காரணத்தைக் கொண்டும் வாபஸ் இல்லை. ஒரு பயிற்சியில் சேருவதற்காக விண்ணப்பித்தவர் பயிற்சியில் சேர்ந்த பிறகு வேறு பயிற்சிக்கு மாற்றிக் கொள்ள முடியாது.
* வேறு பயிற்சியில் சேர வேண்டுமானால் மீண்டும் புதிதாக விண்ணப்பித்து அதற்குரிய கட்டணங்களை செலுத்திய பிறகே சேர முடியும். செக் - குகள், போஸ்டல் ஆர்டர்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

## அனுமதி ஆணை - அனுமதி எண்கள்

பயிற்சிக் கட்டணத்தோடு உங்கள் விண்ணப்ப படிவம் கிடைக்கப் பெற்றதும் அட்மிஷன் போட்டு பாடங்களுடன் அனுமதி ஆணை (Provisional Admission Order) அனுப்பப்படும். அதில் மாணவர்களுக்கான அனுமதி எண்கள்(Enrollment Number) குறிப்பிடப்பட்டிருக்கும்.

இந்த அனுமதி எண்கள் மிகவும் முக்கியமானதாகும். பணம் அனுப்பும்போதும் மற்ற எல்லாவித கடிதங்களிலும் மாணவர்கள் இந்த அனுமதி எண்களை மறக்காமல் குறிப்பிட வேண்டும்.

அனுமதி எண்கள், முழு முகவரி குறிப்பிடாமல் வரும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டாது.

முடியும் என்று நம்புவோர்க்கே
எதுவும் முடியும்...

# நீங்கள் எந்தப் பயிற்சியில் சேரலாம்?

## 1. ஓவிய ஆசிரியர் பயிற்சி FREE HAND DRAWING - HIGHER GRADE

இது அரசுத் தேர்வுக்கு உரியது. வேலை வாய்ப்புக்கு ஏற்றது. பள்ளிகளில் ஓவிய ஆசிரியர் ஆகலாம். இதில் சேர S.S.L.C. தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். நீங்கள் S.S.L.C.
படித்தவராக இருந்தால், முதலில் இந்தப் பயிற்சியில் சேர்ந்து, பிறகு மற்ற பயிற்சிகளில் சேரலாம். வேலை வாய்ப்பை விரும்பும் பெண்களுக்கு இந்தப் பயிற்சியே சிறந்தது.

## 2. கமர்ஷியல் ஆர்ட் DIPLOMA IN COMMERCIAL ART (D.C.A.)

இது முழுக்க முழுக்க தொழில் ரீதியானது. போர்டுகள், பேனர்கள், சிலைடுகள், சுவர் விளம்பரங்கள் எழுத பயிற்சி அளிக்கப்படும். ஓரளவு வரையத் தெரிந்தவர்கள் இதில் சேர்வது நல்லது. கல்வித் தகுதி தேவையில்லை. தமிழ் எழுத படிக்கத் தெரிந்தால் போதும். ஆனால் நீங்கள் S.S.L.C.
தேர்ச்சி பெற்று இருந்தால் முதலில் FREEHAND தேர்வெழுதி, பின்னர் கமர்ஷியல் ஆர்ட் படிக்கலாம் நல்ல பலன் கிடைக்கும். இது எங்கள் கருத்து. மற்றபடி உங்கள் விருப்பம்.

## 3. பத்திரிகை ஓவியம் DIPLOMA IN MAGAZINE (D.M.A.)

வேலை வாய்ப்பையோ, வியாபார ரீதியாக தொழில் நடத்துவதையோ விரும்பாமல் ஓவியத் துறையில் பெரிய அளவில் புகழ் பெற வேண்டும் என்று விரும்புபவர்கள் இப்பயிற்சியில் சேரலாம். ஓவியக் கலையின் பலவிதமான நுட்பங்களைக் கற்றுச் சிறந்த ஓவியராகலாம். புகழோடு பணமும் உங்களைத் தேடி வரும்.

## 4. ஓவிய நுண்கலைப் பயிற்சி DIPLOMA IN FINE ART (D.F.A.)

இது அனைவருக்கும் ஏற்ற அற்புதமான பயிற்சி, உங்களுக்குள்ளே ஒளிந்திருக்கும் ஓவியரை வெளிக் கொணர்ந்து உலகுக்கு அறிமுகப்படுத்தும் உன்னதமான பயிற்சி. மனதுக்கு நிறைவைத் தரும் மகத்தான பயிற்சி. ஓவியக் கலையை அடிப்படையிலிருந்தே கற்று உங்கள் கிறுக்கல்கள் எல்லாம் சித்திரமாகும் வித்தையை தரும் வித்தியாசமான பயிற்சி. இதற்கு செலவழிக்கும் பணம் வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு பயன்படும். உங்களை மற்றவர்களிலிருந்து வேறுபட்டவராக உயர்த்தி காட்டுவது இப்பயிற்சி. நீங்கள் ஆயிரத்தில் ஒருவராகத் திகழலாம்.

## 5. ஸ்கிரீன் பிரிண்டிங் பயிற்சி DIPLOMA IN SCREEN PRINTING (D.S.P.)

இது ஒரு தொழிற் பயிற்சி. கல்வித் தகுதி தேவையில்லை. குறைந்த முதலீட்டில் நிறைந்த வருமானம் பெற ஏற்றத் தொழில். இயந்திரச் சாதனங்கள் எதுவும் இல்லாமல் நடக்கும் அச்சுத் தொழில், பெண்களுக்கு மிகவும் ஏற்றது. ஓவியம் வரையும் திறமை இதற்குத் தேவையில்லை. பயிற்சிக் கட்டணமும் குறைவு. நீங்கள் எந்த பயிற்சியில் விரும்பி சேர விரும்பினாலும் அதோடு இந்தப் பயிற்சியிலும் சேர்ந்து பயன் பெறுங்கள். இது வருமானம் தரும் பயிற்சியல்லவா.

## 6. சிறுவர் சித்திரப் பயிற்சி CHILDREN'S ART COURSE

சிறுவர்கள், குழந்தைகள், மாணவர்கள் மட்டுமல்ல. இப்பயிற்சியில் யார் வேண்டுமானாலும் சேரலாம். ஏராளமான படங்களோடு. இது ஒரு ஆர்வமுள்ள அடிப்படைப் பயிற்சியாக உள்ளது. நீங்கள் நிறைய படங்கள் வரையலாம். திறமை வேகமாக வளரும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பயிற்சிக் கட்டணமும் குறைவு.

பொதுவாக அஜந்தாவில், ஒருவர் ஒரே சமயத்தில் ஒரே பயிற்சியில் மட்டுமே சேரமுடியும் என்ற நிபந்தனை வைத்துள்ளோம். ஆனால் வேறு பயிற்சியில் சேருபவர்கள் சிறுவர் சித்திரப் பயிற்சியிலும் சேரலாம் என்று இதற்கு மட்டும் விதிமுறையைத் தளர்த்தியுள்ளோம். சிறுவர் சித்திரப் பயிற்சியில் சேருங்கள். மகிழ்ச்சி அடையுங்கள்.

## 7. கார்ட்டூன் ஓவியப் பயிற்சி CARTOON ART COURSE

இந்தப் பயிற்சியும் அனைவருக்கும் ஏற்ற அற்புதமான பயிற்சியாகும். சேருங்கள் உங்கள் படைப்பாற்றலை வெளிப்படுத்துங்கள்.

நல்ல புத்தகங்களைச் சேர்த்து வைத்திருக்கிறவன்
நிறைய நண்பர்களைச் சேர்த்து வைத்திருக்கிறான்...

## பயிற்சிக் கட்டண விவரங்கள்

| வரிசை எண் | பயிற்சியின் பெயர் | பயிற்சிக் கட்டணம் | மொத்தமாக செலுத்தினால் | தவணை முறையில் செலுத்தினால் | பயிற்சிக் காலம் | பயிற்சி முறை |
|---|---|---|---|---|---|---|
| 1. | **ஓவிய ஆசிரியர் பயிற்சி** | ரூ. 9000/- | **ரூ. 7000/-** | ரூ. 3000/- + ரூ. 3000/- + ரூ. 3000/- (மூன்று தவணைகளில்) | ஆறு மாதம் | அஞ்சல் வழி & நேர்முகம் |
| 2. | **கமர்ஷியல் ஆர்ட்** | ரூ. 2300/- | **ரூ. 1800/-** | ரூ. 800/- + ரூ. 750/- ரூ. 750/- (மூன்று தவணைகளில்) | ஆறு மாதம் | அஞ்சல் வழி |
| 3. | **பத்திரிகை ஓவியம்** | ரூ. 6000/- | **ரூ. 4500/-** | ரூ. 2000/- + ரூ. 2000/- ரூ. 2000/- (மூன்று தவணைகளில்) | ஆறு மாதம் | அஞ்சல் வழி |
| 4. | **ஓவிய நுண்கலைப் பயிற்சி** | ரூ. 6000/ | **ரூ. 4500/** | ரூ.2000/- + ரூ. 2000/- ரூ. 2000/- (மூன்று தவணைகளில்) | ஆறு மாதம் | அஞ்சல் வழி |
| 5. | **ஸ்கிரீன் பிரிண்டிங் பயிற்சி** | ரூ.1200/- | **ரூ. 900/-** | ரூ. 600/- + ரூ. 600/- (இரண்டு தவணைகளில்) | இரண்டு மாதம் | அஞ்சல் வழி |
| 6. | **சிறுவர் சித்திரப் பயிற்சி** | ரூ. 4000/- | **ரூ. 2900/-** | ரூ. 2000/- + ரூ. 2000/- (இரண்டு தவணைகளில்) | ஆறு மாதம் | அஞ்சல் வழி & நேர்முகம் |
| 7. | **தஞ்சாவூர் பெயிண்டிங் பயிற்சி** | ரூ. 6000/- | **ரூ. 6000/-** | நேர்முகப் பயிற்சி மட்டும் | ஏழு நாட்கள் | நேர்முகம் |
| 8. | **கார்ட்டூன் ஓவியம் பயிற்சி** | ரூ. 3200/- | **ரூ. 2500/-** | ரூ. 1600/- + ரூ. 1600/- நேர்முகப் பயிற்சியும் உண்டு | ஆறு மாதம் | அஞ்சல் வழி & நேர்முகம் |

நம் அலுவலகத்திற்கு நேரில் வந்து ஆலோசனை பெறுவோரை அன்புடன் வரவேற்கிறோம்.

நமது அலுவலக வேலை நேரம் : காலை 10.00 மணி முதல் – மாலை 5.00 மணி வரை. செவ்வாய் விடுமுறை. ஞாயிற்றுக்கிழமையும் அலுவலகம் செயல்படும். முன்கூட்டியே தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நேரம் பெற்றுக் கொண்டு வருவது நல்லது.

**தொலைபேசி எண் : 044-26490363, 9940390708**

கீழ்க்காணும் பேருந்துகள் பூவிருந்தவல்லிக்கு வருகின்றன.

1. பிராட்வேயிலிருந்து 53, 53 A, 53, 101, 153, 253 அமைந்தகரை வழியாக...
   54, 54T, 54G, 54K, PP54 மவுண்ட்ரோடு வழியாக
2. தாம்பரத்திலிருந்து PP 66, 66, 566
3. கோயம்பேடு – காஞ்சிபுரம் செல்லும் அனைத்து பேருந்துகளும் பூவிருந்தவல்லியில் நிற்கும்.




மனம் சோர்வடைய இடம் கொடுக்காதே
ஊக்கமது கைவிடேல்...



# அஜந்தா ஸ்கூல் ஆஃப் ஆர்ட்ஸ்

நெ.6, முத்து நகர், (சுந்தர் திருமண மண்டபம் அருகில்)
பூந்தமல்லி, சென்னை – 600 056.
செல் : 99403 90708 / 86105 96760